**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE PRINCIPAL SESSIONS JUDGE, MADURAI**
**C.C.No.13/2014**
**Prosecution Witness P.W. 3**
.....

| | | | |
|---|---|---|---|
| Name | : திரு. அழகேசன் | Caste | : |
| Father's name | : | Calling | : |
| Village | : | Religion | : |
| Taluk | : | Age | : |

நாள் - **07.01.2025.**

**(எதிரிகள் ஆஜர்)**

**முதல்விசாரணை-**

நான் கடந்த 2003 ஜனவரியில் தமிழ்நாடு மின்சார வாரியத்தில் இளநிலை மின்பொறியாளராக பணியாற்றி ஓய்வு பெற்றேன். என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் உள்ள கையெழுத்து என்னுடையது தான். கடந்த 2001 ம் வருடம் தேதி ஞாபகமில்லை, மதுரை, சிந்தாமணி ஏரியா, மாவுமில்லில் உயரதிகாரிகளின் உத்தரவுப்படி மீட்டரை கழற்றி ஒப்படைத்தேன். என்ன காரணத்திற்காக ஒப்படைக்கப்பட்டது என்று எனக்கு தெரியாது. அந்த மீட்டரை கழற்றும் போது அந்த இடத்தில் நான் இருந்தேன். நான் கையெழுத்து செய்த போது யார் யார் இருந்தார்கள் என்றால் ஞாபகமில்லை. மாவுமில்லில் உயரதிகாரிகள் ஆய்வு செய்தார்கள். மாவுமில்லில் ஆய்வு செய்ததற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள். என்னுடன் கார்த்திக்செல்வன் என்ற உதவியாளரும் அதில் கையெழுத்து போட்டார். நான் கையெழுத்திட்ட ஆவணம் **அ.சா.ஆ.4** ஆகும். மீட்டரை ஒப்படைத்தற்காக என்னிடம் கையெழுத்து வாங்கினார்கள், அவ்வாறு நான் கையெழுத்து செய்த ஆவணம் அ.சா.ஆ.5 ஆகும். மீட்டர் காட்டினால் அடையாளம் காட்ட முடியுமா என்றால் 24 வருடம் ஆகிவிட்டதால் அடையாளம் காட்ட முடியாது என்று கூறினார். இதுகுறித்து காவல்துறையினர் என்னை விசாரித்தனர்.

**<u>குறுக்குவிசாரணை</u>**

சம்பவகாலத்தில் அ.சா.1 ராமமூர்த்தி என்பவர் உதவிசெயற்பொறியாளராக இருந்தார். அவர் உத்தரவு கொடுத்ததனால் தான் அந்த மீட்டரை கழற்றினேன் என்றால் சரிதான். சம்பவ காலத்தில் சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் பகுதியில் ஆள்வரம்பிற்கு உட்பட்ட இளநிலை பொறியாளராக இருந்து வந்தேன் என்றால் சரிதான். என்னுடைய பணி எனது ஆள்வரம்புக்கு உட்பட்டஇடங்களில் மின்சார பராமரிப்பு மற்றும் ஆய்வு கட்டணம் வசூலித்தல் ஆகியவை ஆகும். எனது எல்லைக்குள்பட்ட பகுதிகளில் மின்சாரபயன்பாடுகள் சரியானமுறையில் பயன்படுத்தப்படுகிறதா என்று நான் 3 மாதங்களுக்கு ஒருமுறை ஆய்வு செய்ய வேண்டும் என்றால் சரிதான். அவ்வாறு ஆய்வு செய்யும் போது, ஆய்வு சரியாக இருந்தது என்பதற்கு எதுவும் பதிவுகள் செய்வோமா என்றால் அந்த மாதிரி ரெக்கார்டுகள் எதுவும் நாங்கள் பதிவு செய்ததில்லை. நான் கையெழுத்து செய்துள்ள இரண்டு ஆவணங்களும் மீட்டரை கழற்றி கொடுத்ததற்காக நான் கொடுத்த ஆவணங்கள் ஆகும். நான் மீட்டரை கழற்றும் போது என்னுடைய உயரதிகாரிகள் எல்லாம் சம்பவ இடத்தில் இருந்தார்கள். பொதுவாக ஒரு இடத்தில் இருந்து மீட்டரை கழற்ற வேண்டும் என்றால் அந்த இடத்தின் உரிமையாளரிடம் அறிவிப்பு கொடுத்து மீட்டரை கழற்ற வேண்டும் என்றால் சரிதான். மீட்டரை கழற்றும் போது அது என்ன நிலைமையில் இருந்தது என்பதை அந்த அறிவிப்பில் தெரிவிக்க வேண்டும் என்றால் சரிதான். பொதுவாக மீட்டரை கழற்றும் போது அதன் உரிமையாளரிடம் கையொப்பம் பெற வேண்டும் என்றால் சரியல்ல. நான் மீட்டரை கழற்றும் போது எனது உயரதிகாரிகளை தவிர அந்த மில்லின் உரிமையாளர் இருந்தாரா என்றால் இல்லை, அவர்கள் சம்பந்தப்பட்ட யாரேனும் இருந்தார்களா என்றால் ஞாபகமில்லை. நான் மீட்டரை கழற்ற செல்லும் போது கம்பெனி திறந்து

அங்கு ஆட்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். மீட்டர் உள்ள அறைக்கு மேல் ஒரு பாக்ஸ் இரும்பினால் (bilper box) இருக்கும் என்றால் சரிதான். நான் சென்று பார்க்கும் போது அந்த பாக்ஸ் பூட்டியிருந்தது. அந்த பாக்ஸை திறந்து தான் உள்ளிருக்கும் மீட்டர் எடுக்கப்பட்டது என்றால் சரிதான். அந்த பில்ஃபர் ப்ரூப் பாக்ஸை நாங்கள் தான் திறந்தோம். அந்த பில்ஃபர் ப்ரூப் பாக்ஸை நான் கழற்றி கொடுக்கவில்லை. போலிசார் என்னை விசாரித்த போது 11.00 மணிக்கு சம்பவ இடத்திற்கு போனதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொன்ன மாதிரி சொன்ன விதத்தில் மீட்டர் எதுவும் கழற்றி கொடுக்கப்படவில்லை என்றாலும், அதற்காக நான் எந்த ஆவணத்திலும் கையெழுத்து செய்யவில்லை என்றாலும், உயரதிகாரிகளின் உத்தரவின் பேரில் பின்னிட்டு தயாரிக்கப்பட்ட ஆவணங்களில் நான் கையொப்பம் இட்டு அதற்கு ஆதரவாக சாட்சியம்அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஒப்பம்/-****

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு
அதை தட்டச்சருக்கு என்னால் சொல்லப்பட்டு,
அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால்
வாசித்து பார்க்கப்பட்டு / சாட்சிக்கு வாசித்துக்
காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்
கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

Sd./-xxxx
முதன்மை அமர்வு நீதிபதி,
மதுரை.